بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 24

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

06 துல் கஃதா 1442 ஹிஜ்ரி கமரி 17 இஹ்ஸான் 400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 17 ஜூன் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ ؕ قُلْ فَمَنْ يَّمْلِكُ مِنَ اللّٰهِ شَيْـًٔا اِنْ اَرَادَ اَنْ يُّهْلِكَ الْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ وَاُمَّهٗ وَمَنْ فِى الْاَرْضِ جَمِيْعًا

நிச்சயமாக மர்யமின் மகன் மஸீஹ் தான் அல்லாஹ் எனக் கூறுகின்றவர்கள் உறுதியாக நிராகரிப்பவர்களாகி விட்டனர். நீர் (அவர்களிடம்) கூறுவீராக. மர்யமின் மகன் மஸீஹையும், அவருடைய தாயாரையும் பூமியிலுள்ள எல்லாரையும் அல்லாஹ் அழித்து விட நாடினால் அவனுக்கு எதிராக ஆற்றல் பெற்றவன் எவன்?. (5:18)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனிதன் ஓர் அழிந்து போகும் உயிரினம் ஆவான். மரணம் எப்போது வந்து விடும் என்பது தெரியாது. மேலும் வாழ்நாள் என்பது நீடித்த ஒரு விஷயமல்ல. அவ்வாறிருக்க நமது சீர்திருத்தம் மற்றும் வெற்றியின் கவலையில் மூழ்கிவிடுவது எந்த அளவுக்கு அவசியமாக உள்ளது!**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

பட்டலாவின் தஹ்ஸீல்தார் லாலா கேஷூதாஸ் தற்செயலாக காதியானிற்கு வந்திருந்தார். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை சந்திப்பதற்கு (அன்னாரின் வீட்டிற்கும்) வந்தார். பக்கீர்மார்களை (இறைநேசர்களை) சந்திப்பதற்கு எனக்கு மிகுந்த ஆர்வம் உள்ளது. இந்த அன்பின் காரணமாக நான் தங்களின் சமூகத்தில் ஆஜராகி உள்ளேன் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: உங்களது உள்ளத்தில் அன்பர்கள் மீது நேசம் இல்லையென்றால் தாங்கள் எப்படி என்னிடம் வருவீர்கள்? உலகத்திலிருந்து தனித்து வாழும் ஒருவரிடம் செல்வதற்கு ஓர் உலகவாதிக்கு என்ன அவசியம் உள்ளது? தொடர்பு ஓர் அவசியமான விஷயமாகும். அசல் விஷயம் என்னவென்றால், மனிதன் ஓர் அழிந்து போகும் உயிரினம் ஆவான். மரணம் எப்போது வந்து விடும் என்பது தெரியாது. மேலும் வாழ்நாள் என்பது நீடித்த ஒரு விஷயமல்ல. அவ்வாறிருக்க நமது சீர்திருத்தம் மற்றும் வெற்றியின் கவலையில் மூழ்கிவிடுவது எந்த அளவுக்கு அவசியமாக உள்ளது.

ஆனால் நான் பார்க்கின்றேன். உலகம் தனது வேலையில் எப்படி மூழ்கியுள்ளது என்றால் மறுமையை பற்றி கொஞ்சமும் கவலையும், எண்ணமும் இல்லை. இறைவன் என்ற ஓர் இருப்பே இல்லை என்ற நிலையில் இறைவனிடமிருந்து கவனமற்ற நிலையில் உலகம் உள்ளது. உலகத்தின் ஈமானிய நிலை எந்த அளவிற்கு பலவீனமாகி விட்டதென்றால் அல்லாஹ் என்னை தன் புறமிருந்து அனுப்பி இருக்கின்றான். உயிருள்ள இறைவன் மீது உயிருள்ள ஈமானை ஏற்படுத்துவதற்குரிய வழிகளை கூறுவதற்காக இறைவன் என்னை அனுப்பி இருக்கின்றான். இது குறித்து உலகம் கவனமற்றதாக உள்ளது.

இவ்வாறு அனுப்புவது இறைவனின் பொதுவான சட்டமாகும். நற்பேறு மற்றும் நேர்வழியில் பங்கு பெறாத ஏராளமான மக்கள் என்னை பொய்யர் என்றும், இட்டுக்கட்டுபவர் என்றும் கூறுகின்றனர். இறையச்சம் மற்றும் நீதியிலிருந்து அவர்கள் செவிடர்களாக உள்ளனர். எல்லா அம்சங்களின் அடிப்படையிலும் எனக்கு துன்பங்கள் கொடுப்பதற்கும், தொல்லைகள் தருவதற்கும் முயற்சிகள் செய்தனர். குஃப்ர் ஃபத்வாக்களை (நிராகரிப்பிற்கான தீர்ப்பு) வழங்கி முஸ்லிம்கள் தப்பெண்ணம் கொள்ள விரும்பினர். உண்மைக்கு எதிரான விஷயங்களை அரசாங்கத்திற்கு முன் எடுத்து வைத்து எனக்கு எதிராக அரசாங்கத்தை தூண்டி விடுவதற்கு முயற்சி செய்தனர். பொய் வழக்குகள் தொடுத்தனர். ஏசிப் பேசினர். கொலை செய்வதற்கு திட்டம் தீட்டினர்.

சுருக்கமாக அவர்கள் செய்யாத என்ன காரியம் தான் உள்ளது? ஆனால் எனது இறைவன் எப்போதும் என்னுடன் இருக்கின்றான். அவர்களின் அனைத்து தீங்குகளை குறித்தும், அவர்களின் குழப்பங்களைப் பற்றியும், அதன் விளைவுகளைக் குறித்தும் எனக்கு முன்னரே அவன் செய்தி வழங்கினான். ஒரு நீண்ட காலத்திற்கு முன்பாக அவன் எனக்கு கூறி விஷயமே இறுதியில் நடந்தது.

மேலும் இறைவன் எவர்களுக்கு நற்பேறிலும், இறையச்சத்திலும், ஈமானிய ஒளியிலும் பங்கு வழங்கியிருந்தானோ மேலும் எவர்கள் என்னை கண்டு கொண்டார்களோ அவர்கள் இறைவன் எனக்கு வழங்கிய அகப்பார்வை மற்றும் இறைஞானத்தின் ஒளியிலிருந்து பங்கு பெறுவதற்காக என்னை சுற்றி ஒன்றுகூடி விட்டார்கள். அவர்களில் பெரும் பெரும் அறிஞர்களும் உள்ளனர். பட்டதாரிகளும் உள்ளனர். வழக்குரைஞர்களும், மருத்துவர்களும் உள்ளனர். அரசாங்கத்தில் உயர் பொறுப்பில் உள்ள அதிகாரிகளும் உள்ளனர். வியாபாரிகளும், விவசாயிகளும் உள்ளனர். எளிய மக்களும் உள்ளனர். வேதனை என்னவென்றால், தகுதியற்ற எதிரி நாம் எடுத்து வைக்கின்ற ஓர் உண்மையான விஷயத்தை அமைதியாக கேட்பது கூட கிடையாது. அவர்களிடம் நல்லொழுக்க நிலை எங்கே உள்ளது?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 299, 300 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

**அல்லாஹ் தன் மீது ஈமான் கொண்டதற்குப் பிறகு தொழுகையை நிலைநாட்டுமாறு கட்டளையிட்டுள்ளான். எனவே, ஒவ்வோர் அஹ்மதி ஆணும் பெண்ணும் தமது தொழுகையைப் பேணுவதன் பக்கமும், குறிப்பாக ஜமாஅத்தாக தொழுவதன் பக்கமும் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.**

**(குத்பா ஜுமுஆ 20 ஜனவரி 2017)**


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிகள் உண்மையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நவூதுபில்லாஹ் இழிவுபடுத்துவதாக பொது மக்கள் குறை மதியின் காரணமாக கருதுகின்றனர்**

**இவர்களிலிருந்தே அன்பின் துளிகள் சொட்டுகின்றன என்பதை நாம் எப்போதும் பார்த்து வந்துள்ளோம். எதிர்காலத்திலும் இன்ஷா அல்லாஹ் சொட்டும்**

**நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரியாக இருக்கின்றோம் என்று இந்த மக்கள் கருதுகின்றனர். மேலும் இந்த மக்கள் அதன் காரணமாக நம்மை எதிர்க்கின்றனர். இந்த எதிர்ப்பு என்பது சில தவறான புரிதல்களின் விளைவாக அமைந்துள்ளது**

**நீங்கள் முழு உலகையும் சில நாட்கள் வரை ஏமாற்ற முடியும். அல்லது நீங்கள் சிறிய கூட்டத்தை நிரந்தரமாக ஏமாற்ற முடியும். ஆனால் முழு உலகையும் நிரந்தரமாக உங்களால் ஏமாற்ற முடியாது. உண்மை மெது மெதுவாக வெளிப்பட்டு கண்முன் வந்து விடும்**

**நமது பணி துஆ செய்வதாகும். பொறுமை செய்வதாகும். இதுவே சிறந்த வழிமுறையாகும். இன்ஷா அல்லாஹ் இதுவே நமக்கு வெற்றியையும் வழங்கும்**

**ஒரு முஸ்லிமிற்காக நமது உணர்வுகளையும், நமது எண்ணங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். இதுவே நமது பணியாகும். மேலும் அவர்களின் கண்களை அல்லாஹ் விரைவில் திறப்பதற்கும், காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டு அவர்களை அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவர்களாக ஆகி விடுவதற்காகவும் நாம் முஸ்லிம்களுக்காக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 மே 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **14 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

உலகில் எங்கு குழப்பமும் சண்டையும் ஏற்பட்டாலும் அதற்குக் காரணம் காதியானிகள்தான் என்று கடந்த நாட்களில் ஒரு மவ்லவி சாஹிப் சமூக ஊடகத்தில் கூறிக்கொண்டிருந்தார். இன்னும் சொல்வதென்றால், பாலஸ்தீனத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் குழப்பத்திற்கான பொறுப்பையும் அவர் காதியானிகள் மீது, அஹ்மதிகள் மீது சுமத்திக் கொண்டிருந்தார். பிறகு, இந்த மக்களின் வழிமுறைப்படியும் பொதுவாக இவர்கள் கூறி வருவது போன்றும், எனவே அஹ்மதிகளுடன் இவ்வாறு நடந்து கொள்ளுங்கள்; அவ்வாறு நடந்து கொள்ளுங்கள். அவர்களைக் கொலை செய்வது, அவர்களை அடிப்பது எல்லாமே ஆகுமானது தான் என்றெல்லாம் கூறுகின்றனர்.

ஆக எவ்வாறிருப்பினும் இது இவர்களின் வழிமுறையாகும். இவை இவர்களின் பேச்சுக்களாகும். அஹ்மதிய்யத் துவங்கியதிலிருந்து இந்த விஷயங்களையே இவர்கள் கூறி வந்திருக்கின்றனர். இவர்கள் நிராகரிப்பவர்களின் தலைவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் இறைவனுக்கு மிக்க நன்றி! நாம் எத்தகைய மஹ்தி மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றால், அன்னார் நமக்கு இவர்களின் இந்த பிதற்றல்களைக் கேட்டு, மனதைப் புண்படுத்தும் விஷயங்களைக் கேட்டு, மேலும இந்தப் பேச்சுக்கள் மட்டுமே அல்ல; மாறாக, இவர்களின் செயல் ரீதியான முயற்சிகளையும் பார்த்து, அவற்றையும் எதிர்கொண்டு பொறுமையுடனும் துஆவுடனும் நீங்கள் செயல்பட வேண்டும் என்று போதித்துள்ளார்கள்.

இவர்கள் நிராகரிப்பவர்களின் தலைவர்கள் ஆவர். இவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பாகத் தவறான விஷயங்களைப் பரப்பிவிட்டு அப்பாவி முஸ்லிம்களைத் தூண்டிவிட்டுள்ளார்கள். பொதுமக்களோ அறிவுக் குறைபாட்டின் காரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையிலேயே அஹ்மதிகள் இழிபடுத்த முற்படுகின்றனர் போலும்! (நவூதுபில்லாஹ்). எனவே நிச்சயமாக இவர்களோடு இவ்வாறே நடந்து கொள்ள வேண்டும். மவ்லவி கூறுவது உண்மை தான் என்று கருதுகின்றனர்.

ஆனால் இதுவோ பொது மக்களின், பாமர முஸ்லிம்களின் நிலைப்பாடாகும். ஆனால் அவர்கள் கூறும் விஷயங்களுக்கு எந்த உறுதியான அடித்தளமும் இல்லை என்பதை உண்மையிலேயே அறிவு படைத்த மவ்லவிகள் அறிந்துள்ளனர். தங்களின் சொற்பொழிவு மேடைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்; யாரும் தங்களை தங்களின் இடத்தை விட்டு அகற்றி விடக் கூடாது என்பதற்காக இவர்கள் வெறும் குழப்பம் விளைப்பதற்கு முயற்சி செய்கின்றனர் என்பதை உண்மையில் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

அல்லாஹ் இவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். நான் கூறியதுபோன்று, நமது வேலையோ துஆ செய்வதாகும். இது தொடர்பாக நான் பெருநாள் குத்பாவிலும் கூறினேன். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: எதிரிக்காகவும் துஆ செய்யுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 96)

நாமோ துஆ செய்யக்கூடியவர்கள். துஆ செய்கிறோம்; செய்து கொண்டே இருப்போம். இந்த எதிர்ப்பு ஒன்றும் புதிதான விஷயமல்ல.

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின்

காலத்திலிருந்தே துவங்கியுள்ளது. அன்னார் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. அன்னார் கூறுபவற்றை செவிமடுப்பதற்காக வந்தவர்கள் மீதும் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. சில மக்கள், இவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கலாம் என்று சாதாரணமாகவே கூட்டங்களுக்கு வந்து விடுவார்கள்.

அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது அவசியமில்லை. ஆனால் அந்த மவ்லவிகளுக்கு, ஒருவேளை இவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களின், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விஷயங்களைக் கேட்டு விட்டார்கள் என்றால், இந்த மக்கள் அவர்களிடம் பைஅத் செய்து விடுவார்களே என்ற அபாயம் இருந்து வந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் உண்மை இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. எனவே தான் தடுத்து வந்தார்கள். தாக்கி வந்தார்கள். தடுக்க மட்டும் செய்து வரவில்லை. மாறாக தாக்கியும் வந்தார்கள். ஆனால் இவ்வாறிருந்தும் கூட தடுக்கக்கூடியவர்களாக இருந்த இந்த மக்களுக்காக இவ்வாறு கடுமையாக நடந்து கொண்டவர்களுக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆவே செய்திருக்கிறார்கள்.

இந்த துஆக்களின் விளைவாகவே, அவர்களில் சிலர் எதிர்த்திருந்தும் கூடி ஜமாஅத்தில் இணைந்தார்கள். மேலும் இதுவரை இணைந்து கொண்டிருக்கிறார்கள். ஆக மவ்லவி இவ்வாறு கூறினாலும் கூட நாம் எந்த வீண் பேச்சுக்களைப் பேசக்கூடியவர்களும் இல்லை அல்லது இவர்களைப் போன்று பேசக்கூடியவர்களும் இல்லை. நாமோ துஆவே செய்து கொண்டிருப்போம்.

நாம் எப்போதும் பார்த்து வருவதுபோன்று, இவர்களிலிருந்தே அன்புத் துளிகள் சொட்டி வருகின்றன. இனியும் சொட்டிக் கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹ். பொது மக்களுக்காக, பாமர முஸ்லிம்களுக்காக, நாம் அவர்களின் கடுஞ்சொற்களை செவியுற்ற பிறகும் துஆ செய்கிறோம். அவர்களின் வேதனையில் நமக்கு வேதனை ஏற்படுகிறது. இதற்குக் காரணம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கிய போதனையே ஆகும்.

மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வும் இவ்வாறே அறிவுறுத்தியுள்ளான்: இவர்களின் இந்த அநீதிகளும் கூட தவறான புரிதல்கள் காரணமாக உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பின் காரணமாக உள்ளன. அது இருப்பதாக இவர்கள் வாதம் புரிகிறார்கள். செயல்பட்டாலும் சரி! செயல்படாவிட்டாலும் சரி! வாதம் கண்டிப்பாக உள்ளது. எனவே அவர்களுக்காக தண்டனைக்கான துஆ செய்யக்கூடாது.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது நான் சிறு பிள்ளையாக இருந்தேன். லாஹூரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு விருந்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். அன்னார் சந்தையைக் கடக்கும்போது, மக்கள் மாடிகளில் நின்றுகொண்டு அன்னாரை ஏசிக் கொண்டிருந்தார்கள். மிர்ஸா ஓடிவிட்டார். மிர்ஸா ஓடிவிட்டார் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எனக்குப் புரியாமல் இருந்தது. ஏதாவதொரு கூட்டத்தில், சொற்பொழிவு ஆற்றும்போது குழப்பம் ஏற்பட்டு, அங்கிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இதற்கிடையில் நான் ஒரு வயதானவரைப் பார்த்தேன். அவரது ஒரு கை வெட்டுண்டிருந்தது. அதில் புத்தம் புதிதாக மஞ்சள் பூசப்பட்டிருந்தது. கை வெட்டப்பட்டும் சிறிது காலமே ஆகியிருந்ததுபோல் தெரிந்தது. அந்த வயதானவரும் கூட, தனது ஆரோக்கியமான கையை வெட்டப்பட்ட கை மீது அடித்துக் கொண்டே பஞ்சாபி மொழியில் மிர்ஸா (நட்(ஹ்) கயா, மிர்ஸா நட்(ஹ்) கயா அதாவது மிர்ஸா ஓடிவிட்டார். மிர்ஸா ஓடிவிட்டார் என்று கூறிக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மிர்ஸா ஓடிவிட்டார் என்று இவர் ஏன் கூறுகிறார்? அப்படி என்ன சம்பவம் நடந்து விட்டது? என்று எனது வயதின் அடிப்டையில் அப்போது நான் வியப்படைந்தேன். எனக்கோ இத்தகைய விஷயம் புரியவில்லை. எதிர்ப்பு இருந்தது அல்லது மவ்லவிகள் மக்களைத் தூண்டிவிட்டிருந்தார்கள் என்பதால் மட்டுமே நடந்தது. அவர்களின் மனதில் வந்ததையெல்லாம் கூறிக் கொண்டிருந்தார்கள். விஷயம் தெரியுமோ தெரியாதோ பேச வேண்டியிருந்தது. பேசி விட்டார்கள்.

இவ்வாறே இன்னொரு நிகழ்வை எடுத்துரைக்கிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு முறை லாஹூர் நகரத்தில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது பின்னாலிருந்து யாரோ தாக்கினார்கள். அன்னார் விழுந்து விட்டார்கள். சில அறிவிப்புகளில் தடுமாறினார்கள். ஆனால் விழவில்லை என்று வருகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இவ்வாறே மக்கள் கல்லெறிவதையும் நாங்கள் கண்டுள்ளோம். கல்லும் எறிந்து வந்தார்கள். சுருக்கமாக, அந்த நாட்களில் எதிர்ப்பு மிகவும் வலுவானதாக இருந்தது. இயற்கையாகவே! ஜமாஅத்தின் சில தோழர்களுக்கும், ஏன் இவர்கள் காரணிமன்றி இவ்வாறு செய்கிறார்களே என்று கோபமும் வந்து கொண்டிருந்தது. அப்பொழுது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் வந்தது.

இதுவரையிலான தகவல்கள்படி இந்த இல்ஹாம் வேறு எந்த அறிவிப்பிலும் கிடைக்கப் பெறவில்லை. ஆனால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது இல்ஹாம் என்று கூறியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும், இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை தான்:

اے دل تو نیز خاطر ایناں نگاہ دار     کآخر کنند دعوئے حُبِّ پیمبرمؐ

(இஸாலே அவ்ஹாம் பகுதி 1 ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 182)

அதாவது எம்மால் அனுப்பப்பட்டவரே! உம்மை ஏசும் இந்த முஸ்லிம்களை – அவர்கள் உம்மை ஏசினாலும் கூட நீர் கருத்திற் கொள்வீராக. இது இல்ஹாம் என்றால் அல்லாஹ் கூறுகிறான். இவர்கள் ஏன் தான் உம்மை ஏசுகிறார்கள்? ஏன் உம்மைக் கொல்வதற்காக ஓடி வருகிறார்கள்? ஏன் உம்மீது தாக்குதல் தொடுக்கிறார்கள்? இந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவே உம்மை அடிக்கிறார்கள். ஏசுகிறார்கள். எனவே இவர்களைக் கருத்திற் கொள்வது மிகவும் அவசியம்.

எந்த நேசத்தின் காரணமாக இவர்கள் அடிக்கிறார்களோ,

**எல்லாரிடத்தும் அன்பு;**
**எவரிடத்தும் இல்லை பகை**

எந்தக் காரணத்தால் இவர்கள் அடிக்கிறார்களோ, அது அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதான அன்பாகும். எனவே இந்தத் தவறான புரிதலின் காரணமாகவோ அல்லது வேறு எந்தக் காரணமாக இருந்தாலும் சரி! நீர் அவர்களைக் கருத்திற் கொள்வீராக. தண்டனைக்கான துஆ செய்யாதிருப்பீராக.

ஆக நமக்கு ஏற்படும் எதிர்ப்புக்குப் பின்னால் என்ன விஷயம் இருக்கிறது? என்று பார்க்க வேண்டும். நம்மை ஏசும் இந்த மக்களின் பார்வையில் நமது தேனீர், மதுவை விட மோசமானது. மது அருந்துவது கூட ஆகுமானதாகி விடலாம். ஆனால் அஹ்மதிகளின் தேனீரை அருந்துவது ஆகுமானதாக (இருக்க) முடியாது என்று கூறும் இந்த மக்களுக்கு இதை எடுத்துரைத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த மக்களுக்கு எனக்குள் எரிந்து கொண்டிருக்கும், ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான அன்பு எனும் தீப்பிழம்பு இவர்களின் இலட்சக்கணக்கான மக்களுக்குள்ளும் கூட எரியவில்லை என்பது தெரிந்து விட்டால் பிறகு – அன்னார் எழுதுகிறார்கள்: அவர்கள் உடனடியாக அஹ்மதிகளாகிய உங்கள் பாதங்களில் விழுந்து விடுவார்கள்.

நாம் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எதிரிகள் என்று இந்த மக்கள் கருதுகிறார்கள். எனவே தான் எதிர்க்கிறார்கள். இந்த எதிர்ப்பு சில தவறான புரிதல்களின் விளைவாக உள்ளது. பிறகு தமது ஒரு விளக்கத்தை எடுத்துரைத்ததன் பின்னர் அன்னார் இதையும் கூறியுள்ளார்கள்:

மக்கள் எதிர்க்கிறார்கள். என்னையோ அல்லது அஹ்மதிய்யா இயக்கத்தின் தோற்றுனரையோ அல்லது உங்களையோ வசைபாடுகிறார்கள் என்றால், இவர்கள் உங்களின் சகோதரர்கள். ஏதோ தவறான புரிதலில் மூழ்கியுள்ளார்கள் என்பதை ஜமாஅத் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஆக நீங்கள் கோபப்படுவதற்குப் பதிலாக துஆக்கள் செய்யுங்கள். மேலும் எதிர்க்கக்கூடிய இவர்களுக்கு அசல் உண்மைத்துவத்தைத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் இவர்களுக்கு அசலான உண்மைத்துவத்தைப் பற்றித் தெரியப்படுத்திவிடும்போது, நாம் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எதிரிகள் அல்ல; மாறாக, அன்னாரின் உண்மை நேசர்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்து விடும். பிறகு நம்மைக் கொல்வதற்கு சித்தமாக இருக்கும் இந்த மக்களே நமக்காக இறப்பதற்குத் தயார் ஆகிவிடுவார்கள்.

(பேரா கி சர் ஸமீன் மே ஏக் நிஹாயத் ஈமான் அஃப்ரூஸ் தக்ரீர், அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 84–86)

எவ்வாறிருப்பினும், நாம் நம்மை எதிர்ப்பவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். நான் முன்னரும் கூறியதுபோன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு துஆக்கள் செய்யுங்கள் என்பதையே கற்றுக் கொடுத்துள்ளார்கள். இவர்களிலிருந்தே அன்பின் துளிகள் சொட்டுகின்றன. இவர்களிலிருந்தே மக்கள் நம்பிக்கை கொள்வார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களின் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள். அதாவது நான் வீட்டின் மேல்தளத்தில் வசித்து வந்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வீட்டின் கீழ்த்தளத்தில் வசித்து வந்தார்கள். ஒரு நாள் இரவு எனக்குக் கீழ்ப்பகுதியிலிருந்து ஒரு பெண் பிரசவ வலியின் காரணமாக கதறுவதைப் போன்ற அழும் குரல் கேட்டது. எனக்கு வியப்பு ஏற்பட்டது. நான் காது கொடுத்து சப்தத்தை (கவனமாக) கேட்டபோது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆ செய்து கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வந்தது.

அன்னார் இவ்வாறு கூறிக்கொண்டிருந்தார்கள். இறைவா! நோய் பரவியுள்ளது. மக்கள் அதன் காரணமாக மரணிக்கின்றனர். இறைவா! இந்த மக்கள் அனைவரும் மரணித்து விட்டார்கள் என்றால் பிறகு உன்மீது யார் ஈமான் கொள்வார்கள்?

இந்த சம்பவம் பிறிதோர் இடத்தில் வந்துள்ளது. சம்பவம் இது தான். ஆனால் பக்கத்து அறையில் இருந்ததாகவும், கதவு வழியாக ஓசை கேட்டதாகவும் வருகிறது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கும் இந்த சம்பவம் தான் நிகழ்ந்தது. இந்த மக்கள் மரணித்து விட்டார்கள் எனில், பிறகு உன் மீது யார் ஈமான் கொள்வார்கள்? என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

பாருங்கள்! பிளேக் நோய் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்னறிவித்திருந்த அடையாளமாக இருந்தது. பிளேக் நோய் எனும் அடையாளம் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளிலிருந்தும் கூட தெரிய வருகிறது. ஆனால், இந்த பிளேக் நோய் வரும்போது, எவருடைய உண்மைத்துவத்தை நிரூபிப்பதற்காக அது வருகிறதோ, அவரே இறைவனுக்கு முன்னால் அழுது மன்றாடி இவ்வாறு கூறுகிறார்:

அல்லாஹ்வே! இந்த மக்கள் மரணித்து விட்டார்கள் என்றால், பிறகு உன் மீது யார் ஈமான் கொள்வார்கள்? எனவே பொது மக்களின் தண்டனைக்காக நம்பிக்கை கொண்டவர்கள் துஆ செய்யக்கூடாது. ஏனெனில் அவர் அவர்களைக் காப்பாற்றுவதற்காகவே நிற்கிறார். பொது மக்களைக் காப்பாறுவதே ஒரு நம்பிக்கை கொண்டவரின் பணியாகும். அவர் அந்த மக்களின் தண்டனைக்கான துஆ செய்வார் எனில், யாரைக் காப்பாற்றுவார்? துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டால் பிறகு அனைவரும் மரணித்து விடுவார்கள்.

அஹ்மதிய்யத் நிறுவப்பட்டதே இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகத் தான். அஹ்மதிய்யத் நிறுவப்பட்டதே அது முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்காகத் தான். மனிதர்களின் மகத்துவத்தை அவர்களுக்குத் திருப்பித் தருவதற்காகத் தான். ஆக எந்த மக்களை உயர்தரத்தைச் சென்றடைய வைப்பதற்காக நாம் நிறுத்தப்பட்டுள்ளோமோ அவர்களுக்காக நாம் தண்டனைக்கான துஆவை எவ்வாறு செய்ய முடியும்?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவனுக்கு உங்களை விட அதிகம் தன்மானம் இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் தனது இல்ஹாமில் இதைத்தான் கூறினான்:

اے دل تو نیز خاطرِ ایناں نگاہ دار     کآخر کنند دعوئے حُبِّ پیمبرمؐ

இதில் இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உள்ளத்தைப் பார்த்து அன்னாரின் நாவினால் இவ்வாறு கூற வைக்கிறான். இது அநேகமாக அன்னார் பேராவில் (ஓர் ஊர் பெயர்) சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் மீண்டும் இந்தக்

கவிதையை எடுத்துரைத்தவாறு அன்னார் கூறினார்கள்: இது மற்றொரு சம்பவமாகும். முதலில் வேறு சம்பவம் இருந்தது. அது லாஹூரில் நிகழ்ந்ததாக இருந்தது. இது பேராவில் நிகழ்ந்த சம்பவம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உள்ளத்தைப் பார்த்து அன்னாரின் நாவினால் இவ்வாறு கூற வைக்கிறான். எனது உள்ளமே! நீ அந்த மக்களின் சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டிரு. இவ்வாறு அவர்களின் உள்ளம் அசுத்தமடையாமல் இருக்கட்டும். நீ தளர்ந்து போய் தண்டனைக்கான துஆ செய்ய ஆரம்பித்து விடாதே!

இறுதியில், அவர்களுக்கு உனது தூதர் மீது அன்பு இருக்கிறது. மேலும் அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இருக்கும் அந்த அன்பின் காரணமாகவே அன்னார் உன்னை ஏசுகிறார்கள். அவர்கள் உன்னை ஏசுகிறார்களே, அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதுள்ள அன்பின் காரணமாகத்தான். இது தான் அசல் விஷயம் ஆகும். நமது எதிரிகளில் ஒரு பகுதி தேவையில்லாமல் எதிர்த்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆனால் ஒரு பகுதியோ, வெறுமனே அவர்களின் வலையில் விழுந்து விட்டது.

பாகிஸ்தானிலோ அல்லது உலகின் வேறு நாடுகளிலும் கூட பெரும்பான்மை அவர்களின் வலையில் சிக்கியுள்ளது.. எனவே அது நம்மை எதிர்க்கிறது. ஆக ஒருவகையில் அவர்களின் எதிர்ப்பு நமது எஜமானர் மீதான அன்பின் காரணமாக உள்ளது. நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிக்கக் கூடியவர்கள் என்பது அவர்களுக்குத் தெரிந்து விடும்போது, இவர்கள் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை நிலைநாட்டக்கூடியவர்கள்; இவர்களுக்கு உதவி செய்யுங்கள் என்று அவர்கள் கூறுவார்கள். அந்த நாள் கண்டிப்பாக வரும். இன்ஷா அல்லாஹ். தவறான புரிதல்கள் எப்போது வரை தான் செல்லும்?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் ஆங்கில எழுத்தாளர் இருக்கிறார். அவர் இவ்வாறு எழுதியுள்ளார். உங்களால் முழு உலகையும் சில நாட்களுக்கு ஏமாற்ற முடியும். அல்லது உங்களால் சில மக்களை நிரந்தரமாக ஏமாற்ற முடியும். முற்றிலும் சரி. ஆனால் உங்களால் முழு உலகையும் நிரந்தரமாக ஏமாற்ற முடியாது. முழு உலகை சில நாட்கள் மட்டுமே உங்களால் ஏமாற்ற முடியும். அதாவது 100% மக்கள் சில நாட்கள் வழிகெடுவது சாத்தியம் ஆகும். அல்லது 10 பேர் நிரந்தரமாக வழிகெடலாம். ஆனால் முழு உலகும் நிரந்தரமாக வழிகெட்டுப்போவது சாத்தியமில்லை.

உண்மையும் இதுதான். உண்மை மெது மெதுவாக வெளிப்பட்டு முன்னால் வந்து விடுகிறது. மேலும் இப்பொழுது இதைத்தான் நாம் பார்க்கிறோம். மக்களில் ஏமாற்றத்திற்காளானவர்களே அவர்களின் பேச்சுக்களைக் கேட்பார்கள். இறுதியில் அவர்களிலிருந்தே அஹ்மதியாகின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதே அது எங்கிருந்து அதிகரிக்கின்றது? முன்னர் எதிரிகளோடு இருந்த அந்த மக்களிலிருந்தே அதிகரிக்கின்றது.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 33 பக்கம் 221–223, குத்பா ஜுமுஆ 18 ஜுலை 1952)

ஆக இந்த எதிர்ப்பு ஒரு நாள் முடிவுக்கு வந்து விடும். இன்ஷா அல்லாஹ். மேலும் இவர்களிலிருந்தே மக்கள் வந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைவார்கள். பல மக்கள் எனக்கும் எழுதுகிறார்கள். இன்றைய நாட்களிலும் கூட எழுதுகிறார்கள். அதாவது நாங்கள் எதிர்த்ததற்குப் பிறகு, துஆ செய்யுங்கள் அல்லது ஜமாஅத் நூல்களைப் படியுங்கள் என்று எங்களிடம் கூறப்பட்டபோது நாங்கள் துஆ செய்து நூல்களைப் படித்த பிறகு உண்மை வெளிப்பட்டு விட்டது. இப்பொழுது நாங்கள் பைஅத் செய்ய விரும்புகிறோம் என்று கூறி பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைகின்றார்கள்.

மேலும் இது தொன்று தொட்டு நடந்து வருகிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இது தொடர்பாக எழுதியுள்ளார்கள். ஏனைய கலீஃபாக்களும் எழுதியுள்ளார்கள். அதாவது பல மக்கள் இவ்வாறு கடிதங்களில் எழுதி வந்தனர். இன்றும் இவையே நடக்கின்றன.

ஆக இந்த மவ்லவிகள் நமக்கு எதிராக அறிக்கை விடுகிறார்கள். அதன் மூலமாக இன்றைய காலங்களில் எந்த அளவு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்கிறார்கள் என்றால், குறிப்பாக எங்கு நம் தரப்பிலிருந்து தூதுச் செய்தியை எட்ட வைப்பது சிரமமாக இருந்ததோ அந்த மட்டத்திலும் எட்ட வைக்கின்றனர். ஆக இவர்கள் நமது வேலையை செய்கின்றனர். மேலும் இவை நமது பலன்களுக்காகவாகும். நாம் அவர்களுக்காகவும் துஆ செய்கிறோம்.

அவர்களில் ஏதாவது ஒழுக்கத்தின் பொறி இருந்தால் அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும் அவர்களுக்குப் புரிந்து விடட்டுமாக. அல்லாஹ் அந்த மக்களுக்கு அவர்களின் பிடியிலிருந்து ஈடேற்றம் அளிப்பானாக என்று பொது மக்களுக்காக, பாமர முஸ்லிம்களுக்காக நாம் அதிகம் துஆ செய்ய வேண்டும்.

எவ்வாறிருப்பினும் இவர்கள் நமது பலனுக்காக எதிர்க்கிறார்கள். எத்தகைய இடங்களுக்கு அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைகிறது என்றால் அங்கு இதற்கு முன் சென்றடைந்ததில்லை. அல்லது நம் மூலமாக சென்றடைய முடியாமல் இருந்தது. பிறகு இந்த மக்களில் சிலர் சுயமாக தொடர்பும் கொள்கிறார்கள். ஆக நமது பணி துஆ செய்வதும் பொறுமை காப்பதும் ஆகும். மேலும் இதுவே சிறந்த வழிமுறையாகும். அது நமக்கு வெற்றியையும் வழங்கும். இன்ஷா அல்லாஹ்.

நமது பணி என்னவென்றால், ஒரு முஸ்லிமுக்காக நமது சிந்தனைகளையும் நமது உயர்வுகளையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அல்லாஹ் விரைவில் அவர்களின் கண்களைத் திறப்பானாக. மேலும் இவர்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாகவும், (காலத்தின் இமாமை) அடையாளங்கண்டு கொள்ளக்கூடியவர்களாகவும் ஆகிவிட வேண்டும் என்று அவர்களுக்காக துஆ செய்து கொண்டேயிருக்க வேண்டும்.

(தமிழில்: மவ்லவி அதாவுல் முஃக்னி)

......☆......☆......☆......

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

**இந்த துஆக்களையும் அதிகமாக செய்ய வேண்டும்**

اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

**(குத்பா ஜுமுஆ 07.05.2021)**

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் (செப்டம்பர் 2013)

**7 அக்டோபர் 2013 திங்கட்கிழமை**

**கேள்வி – பதில்**

☆ இஸ்லாம் மற்றும் Terrorism (தீவிரவாதத்தை) ஒன்றோடு ஒன்று மக்கள் ஏன் இணைக்கின்றார்கள் என்ற ஒரு சிறுமியின் கேள்விக்கு பதிலாக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

உதாரணமாக, இன்று எத்தனை Terrorist குழுக்கள் உள்ளனவோ, அல்காயிதா, தாலிபான், போகோ ஹராம் மற்றும் இன்றும் புதிய புதிய குழுக்கள் முன்னால் வருகின்றனர். இவைகளில் பெரும்பான்மை முஸ்லிம்களுடையதாகும். எனவே இஸ்லாம் மற்றும் Terrorism (தீவிரவாதம்) ஒரே விஷயம் தான் என்று மக்கள் இதிலிருந்து புரிந்து கொள்கின்றனர். நாம் இந்த தவறான புரிதல் மற்றும் இந்த தவறான சிந்தனையை அகற்ற வேண்டும். ஒருபோதும் இரண்டும் ஒன்றல்ல என்பதை நாம் தெளிவுபடுத்த வேண்டும்.

இங்கு புத்தக அரங்குகளில் Pathway to Peace என்ற புத்தகம் உள்ளது. அது பல்வேறு நாடுகளில், பல்வேறு மக்களிடம் நான் ஆற்றிய பல்வேறு சொற்பொழிவுகளின் தொகுப்பு ஆகும். இஸ்லாம் மற்றும் Terrorism–ஐ (தீவிரவாதத்தை) ஒன்றோடு ஒன்றாக கலக்காதீர்கள். இது இரண்டும் வேறுபட்ட விஷயங்களாகும் என்று நான் அவர்களுக்கு கூறுகின்றேன். அந்த மக்களின் Vested Interest இதில் தான் உள்ளது. எனவே அவர்கள் இந்த இரண்டையும் ஒன்றோடு ஒன்று கலந்து விடுகின்றார்கள். எனவே நீங்கள் இந்த புத்தகத்தை வாங்குங்கள். மேலும் அதை படியுங்கள். வாக்கிஃபீனே நவ் பிள்ளைகளுக்கு இந்த புத்தகத்தை 2 டாலக்கு கொடுக்க வேண்டும். இந்தப் புத்தகத்தில் பல்வேறு பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. எல்லா ரீதியிலும் உங்களுக்கு அதில் பதில் கிடைத்து விடும்.

இஸ்லாத்தின் போதனை முற்றிலும் வேறுபட்டதாகும். இஸ்லாம் ஒருபோதும் போர்கள் புரிவதில் முனைப்பு காட்டியதில்லை. மேலும் Terrorism–ம் (தீவிரவாதமும்) ஒருபோதும் செய்ததில்லை. மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைவரையும் மன்னித்து விட்டார்கள். தமது எதிரிகளையும் மன்னித்து விட்டார்கள். திருக்குர்ஆன் அநீதி இழைப்பதை தடை செய்துள்ளது. எவரையும் அநியாயமாக கொலை செய்யாதீர்கள். ஒருவரை நீங்கள் கொலை செய்து விட்டால் அதன் பொருள் நீங்கள் முழு மனித குலத்தையும் கொலை செய்து விட்டீர்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

இப்போது இந்த தீவிரவாத முஸ்லிம்கள் யாரைக் கொல்கின்றார்கள்? அவர்கள் கிருஸ்துவர்களை கொலை செய்வதில்லை. பெரும்பாலும் முஸ்லிம்களையே கொலை செய்கின்றனர். பாகிஸ்தானில் தினமும் தாக்குதல்கள் நடைபெறுகின்றன. அல்லது ஈராக்கில் ஷியாக்களை கொல்கின்றனர். அல்லது ஷியாக்கள் சன்னிகளை கொன்று விடுகின்றனர். அல்லது பல்வேறு தற்கொலை தாக்குதல்கள் நடைபெறுகின்றன. எல்லா இடங்களிலும் முஸ்லிம்கள் மரணிக்கின்றனர். இப்போது தேவாலயத்தில் தாக்குதல் நடைபெற்றுள்ளது. அதில் 100, 200 கிறித்தவர்கள் மரணித்துள்ளனர். ஆனால் மற்ற தாக்குதல்களில் (அதிகமாக) முஸ்லிம்களே மரணிக்கின்றனர். அஹ்மதிகளாகிய நம்மையும் இவர்கள் கொலை செய்கின்றனர். பின்னர் இதன் பிறகு இன்னும் பல இடங்களில் குண்டுகள் வெடிக்கின்றன. இவர்கள் சுயமே தீவிரவாதிகள் ஆவர். ஒருவர் மற்றவரை கொலை செய்கின்றனர். அதனால் எங்கேயும் அனுமதி இல்லை. நீங்கள் ஒருவர் மற்றவருடன் மிகவும் கருணையுடன் நடந்து கொள்ளுங்கள் என்றே அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். ஆனால் இவர்கள் முஸ்லிம்களையே கொலை செய்கின்றனர்.

ஒரு முஸ்லிமை காரணமின்றி கொலை செய்கின்றவரை நான் நரகத்தில் வீசுவேன் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். எனவே இவர்கள் அனைவரும் நரகத்திற்கு செல்கின்றனர். எனவே இஸ்லாம் மற்றும் தீவிரவாதத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இஸ்லாம் என்பதன் பொருள் Peace ஆகும். அமைதி ஆகும். நீங்கள் MTA பார்ப்பீர்கள் என்றால் (வாக்ஃபே நவ் பிள்ளைகள் கண்டிப்பாக MTA பார்க்க வேண்டும்). உங்களுக்கு கண்டிப்பாக தெரிய வரும். இந்த வருடம் UK ஆண்டு மாநாட்டில் எனது நிறைவுரை இருந்தது. அதில் இஸ்லாம் என்றால் என்ன? அதன் பொருள் என்ன? முஸ்லிம்கள் யார்? யார் உண்மையான முஸ்லிம்? என்பது பற்றியே எனது சொற்பொழிவு அமைந்திருந்தது.

பின்னர் நீங்கள் Pathway to peace என்ற புத்தகத்தை சுயமும் படிக்க வேண்டும். அந்நியர்களையும் படிக்க வைக்க வேண்டும். இஸ்லாம் தீவிரவாத மார்க்கமாகும் என்றும் தீவிரவாதத்தை கற்றுக் கொடுக்கும் மார்க்கமாகும் என்றும் எவர்கள் கூறுகின்றார்களோ அவர்களுக்கும் இந்த புத்தகத்தை கொடுங்கள். இஸ்லாம் உண்மையில் என்ன? என்பது அவர்களுக்கும் புரிய வந்து விடும்.

☆ ஒரு வாகிஃபா நவ் (வக்ஃப் செய்யப்பட்ட பெண் பிள்ளை) இந்த கேள்வியை கேட்டார்: வக்ஃபே நவ் பிள்ளைகள் பெரியவர்களாக ஆகிவிடும்போது அவர்கள் எங்கு வேண்டுமானாலும் வேலை செய்யலாமா? ஒரு சாதாரண நபர் தனது வழக்கமான வாழ்க்கையில் வேலை செய்வது போன்று அவரும் வேலை செய்யலாமா?

இந்தக் கேள்விக்கு பதிலாக ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஜமாஅத் அனுமதி வழங்கினால் அவர் செய்யலாம். இல்லையென்றால் கூடாது. ஜமாஅத்திற்கு தொண்டாற்ற வேண்டும். பெண் பிள்ளைகள் ஜமாஅத்திடம் கேட்க வேண்டும். உடனடியாக உங்களின் தேவை இல்லை. எனவே சிறிது காலம் வெளியில் வேலை செய்து கொள்ளுங்கள் என்று ஜமாஅத் கூறினால் வேலை செய்து கொள்ளலாம். ஆனால் அதற்கு அனுமதி கேட்பதும், அனுமதி பெறுவதும் அவசியமாகும்.

இப்போது வரை உங்களுக்கு வக்ஃபே நவ் நிர்வாகம் ஜமாஅத்திடம் அனுமதி பெறாமல் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்றே உங்களுக்கு கூறுகிறது. நான் பல முறை இந்த வழிகாட்டலை வழங்கியுள்ளேன். 15 வயதை நீங்கள் அடைந்து விடும்போது வக்ஃப்பின் படிவத்தை பூர்த்தி செய்து உங்களை நீங்கள் முன்நிறுத்த வேண்டும். உங்களது கல்வி முழுமை பெற்று விடும்போது பின்னர் மீண்டும் உங்களை நீங்களே முன்நிறுத்த வேண்டும். மேலும் நான் எனது கல்வியை முழுமை செய்து விட்டேன். நான் இன்னப் பட்டம் பெற்றுள்ளேன். நான் இப்போது என்ன செய்ய வேண்டும்? என்று எனக்கு கூறுங்கள் என்று கேட்க வேண்டும்.

அப்போது, நீங்கள் உங்களது பணியை செய்யுங்கள். அத்துடன் ஜமாஅத்திற்கும் தொண்டு செய்யுங்கள் என்றோ, அல்லது உங்களை நீங்கள் முழுமையாக ஜமாஅத்திடம் ஒப்படைத்து விடுங்கள் என்றோ உங்களுக்கு கூறப்படும். பின்னர் ஜமாஅத் எங்கு உங்களிடமிருந்து தொண்டு பெற விரும்புமோ அங்கு உங்களை பணியமர்த்தும்.

☆ ஒரு சிறுமி, எந்தத் துறைகளில் வாக்கிஃபாத்தே நவ் பிள்ளைகளின் அவசியம் இருக்கிறது? என்று கேள்வி கேட்டார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் இதற்கு முன்பும் பல முறை கூறியிருக்கின்றேன். எனது வகுப்புகளை பாருங்கள். மருத்துவத்துறை உள்ளது; Teaching துறை உள்ளது; History துறை உள்ளது. அறிவியலில் ஆராய்ச்சி(த் துறை) உள்ளது. அதில் நீங்கள் செல்ல முடியும் என்று நான் கூறியிருந்தேன். ஆயினும் நமக்கு பெரும்பாலும் ஆசிரியர்கள் மற்றும் மருத்துவர்களுக்கான தேவை உள்ளது. Linguistics-ன் தேவை உள்ளது. ஏனென்றால் ஜமாஅத்தின் சொற்பொழிவுகளை மொழியாக்கம் செய்வதற்கு ஏதுவாக அமையும்.

உருது மொழியில் எண்ணற்ற சொற்பொழிவுகள் உள்ளன. இப்போது வரை அப்படியே உள்ளது. ஆங்கில மொழியில் அதன் மொழியாக்கம் செய்யப்பட உள்ளது. உருதுவிலிருந்து ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யுங்கள். அரபியிலிருந்து ஆங்கிலம் மொழியாக்கம் செய்யத் தெரிய வேண்டும். இன்னும் ஏராளமான மொழிகளில் (மொழிபெயர்ப்பாளர்கள்) வர வேண்டும். ஏனென்றால் அதன் மூலம் மொழியாக்கத்தில் உதவி கிடைக்கும்.

Teaching மட்டுமின்றி மருத்துவமும் மிகவும் நல்ல துறையாகும். அடுத்து Arcitucture போன்ற துறைகளும் உள்ளன. உங்களது Statistics சிறந்ததாக இருந்தால் பின்னர் நீங்கள் அதிலும் செல்ல முடியும். உங்களுக்கு அதில் ஆர்வமும் இருக்க வேண்டும். அடுத்து கணினித் துறை உள்ளது. கிராஃபிக்ஸ் போன்ற துறைகளில் பெண் பிள்ளைகள் பணி செய்யலாம்.

☆ ஹுஸூர் அவர்களுக்கு எந்த நாட்டிற்கு செல்வது மிகவும் பிடித்துள்ளது? அல்லது ஹுஸூர் அவர்களின் உள்ளம் விரும்புகின்றது? என்று ஒரு சிறுமி கேள்வி கேட்டார்.

இக்கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: எங்கேயும் செல்ல விருப்பமில்லை. நீங்கள் விருப்பத்தை பற்றி பேசுகின்றீர்கள் என்றால் அஹ்மதிகள் வசிக்கின்ற ஒவ்வொரு நாடும், அவர்களை சந்திப்பதும் எனக்கு விருப்பத்திற்குரியதுதான். எனவே நான் வருகின்றேன். நான் இங்கு சுற்றுலாவிற்காக வரவில்லை. நல்ல ஜமாஅத்தாக இருக்க வேண்டும் மற்றும் அஹ்மதியாக இருக்க வேண்டும்.

☆ மற்றுமொரு வாக்கிஃபே நவ் சிறுமி இவ்வாறு கேள்வி கேட்டார்: ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீப் சாஹிப் (ரலி) அவர்கள் ஷஹீதானாபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறியிருந்தார்கள். அதாவது காபுல் மண்ணே! நீ சாட்சியாக இரு. உம்மீது கடும் குற்றம் செய்யப்பட்டுள்ளது. துர்பாக்கியம் பெற்ற மண்ணே! நீ இந்த மாபெரும் அநீதிக்குரிய இடமாக இருக்கின்றாய். இப்போது பாகிஸ்தானிலும் நிறைய ஷஹாதத்துகள் நடக்கின்றன. அஹ்மதிகள் மீது அதுபோன்ற அநீதிகள் இழைக்கப்படுகின்றன. எனவே பாகிஸ்தானும் இந்த categary-ல் வருகின்றதா?

இக்கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: முதல் விஷயம் என்னவென்றால், நான் உன்னை பாராட்டுகின்றேன். உனது வயது 12 ஆகும். மாஷா அல்லாஹ். உன்னால் நல்ல முறையில் Quote செய்ய முடிகின்றது. மற்றபடி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் நடந்த சம்பவத்தைப் பொருத்தவரை இறைவனின் பார்வையில் சபிக்கப்பட்ட அந்த பூமியின் நிலையை இப்போது பாருங்கள். அங்கு எவ்வகையிலும் அமைதியும் நிம்மதியும் இல்லை. Unrest உள்ளது. அங்கு ஒருபோதும் நிலவரம் அமைதியாக இருக்கவில்லை.

பாகிஸ்தானின் நிலையும் இப்படித்தான் உள்ளது. அஹ்மதிகளின் ஷஹாதத் நிகழ்கின்றது. ஒவ்வொரு 2 அல்லது 3 வாரங்களுக்குப் பிறகும் ஷஹாதத் நிகழ்கின்றது. அல்லது மே 28 அன்று அதிகமான நபர்கள் ஷஹீதானார்கள். ஆனால் இதை விட அதிகமாக தினமும் அவர்கள் தங்களுக்குள் ஒருவரையொருவர் கொலை செய்கின்றனர்.

பாகிஸ்தான் பொருளாதார ரீதியில் முற்றிலும் முடிந்து விட்டது. பாகிஸ்தானில் அரசாங்கம் என்பது இல்லை. உலகில் Terrorist என்ற பெயரால் பிரபலமாகி விட்டனர். இதுவே சபிக்கப்பட்ட பார்வை ஆகும். அது நபியின் கூற்றாக இருந்தது. அவருக்கு இறைவன் கூறியிருந்தான். ஆனால் செயல் ரீதியாக இப்போது இங்கும் அவை அனைத்தும் நடக்கின்றன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் எவ்வாறு நடக்கின்றார்களோ அதன் காரணமாக இந்த உலகில் சுயமே அவர்கள் இழிவடைந்து வருகின்றனர்.

☆ கலீஃபா எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றார்? என்று ஒரு சிறுமி கேட்ட கேள்விக்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

கலீஃபாவை தேர்ந்தெடுப்பதற்கென்று ஒரு தேர்வுக்குழு உள்ளது. அதுவே கலீஃபாவை தேர்ந்தெடுக்கின்றது. அந்தத் தேர்தல் குழுவில் தேசிய அமீர்மார்களும், சில குறிப்பிட்ட தகுதியின் அடிப்படையில் முரப்பிமார்களும், ரப்வாவின் தலைமையக துறையின் உறுப்பினர்களும் அதாவது தஹ்ரீகே ஜதீத் மற்றும் அஞ்சுமனின் உறுப்பினர்களும் உள்ளனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகளின் தலை மகன்களும் இதற்கு முன்பு இடம் பெற்று வந்தனர். ஆனால் தற்போது அப்படி யாரும் இல்லை. இந்த தேர்வுக்குழு கலீஃபாவை தேர்ந்தெடுக்கின்றது. சில பெயர்கள் முன்மொழியப்படுகின்றன. இவை அனைத்தும் மூடப்பட்ட கதவுகளுக்கு உள்ளே நடக்கின்றன. நான் பொதுவாக பத்திரிகையாளர்களின் இந்தக் கேள்விகளுக்கு இவ்வாறே

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

பதிலளிக்கின்றேன். அதாவது இந்த தேர்தல் என்பது போப் தேர்தலைப் போன்றே நடைபெறுகின்றது ஆனால் புகை இல்லாமல் (சச்சரவுகள் இல்லாமல்). பின்னர் யாருக்கு அதிக ஓட்டு கிடைக்கின்றதோ இந்தத் தேர்தல் குழு மூலமாக கலீஃபா தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அங்கு கலந்து கொண்டுள்ள நபர்களின் பெயரே முன்மொழியப்பட வேண்டும் என்றோ அல்லது அதே தேர்வுக்குழுவைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்றோ எந்த அவசியமும் இல்லை. மாறாக, கலீஃபா வெளியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட முடியும். பிறகு பொது வெளியில் அவர் கொண்டு வரப்படலாம்.

எந்த அளவுக்கென்றால் எனது பெயர் கலீஃபாவிற்குாக முன்மொழியப்பட்டு நான் கலீஃபாவாக ஆகிவிட்டேன் என்பதை நான் கூட அறிந்திருக்கவில்லை.

☆ சில நேரங்களில் நாங்கள் அஹ்மதி அல்லாதவர்களுக்கு தப்லீக் செய்கின்றோம். திருக்குர்ஆனிலிருந்து நாங்கள் ஏதாவது ஆதாரத்தை அவர்களுக்கு எடுத்து வைக்கின்றோம். அப்போது திருக்குர்ஆனிற்கு நீங்கள் வழங்கும் மொழியாக்கம் வேறொன்றாகும். நீங்கள் உங்களுக்கு வசதியாக மொழியாக்கம் செய்கின்றீர்கள் என்று அவர்கள் கூறி விடுகின்றார்களே? என்று சிறுமி கேள்வி கேட்டார்.

இக்கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

எந்த வசனத்தின் மொழியாக்கம் அவர்களுக்கு தவறாக தோன்றுகின்றது. 2, 3 வசனங்களின் மொழியாக்கத்திலேயே கருத்து வேறுபாடு உள்ளது. மஸீஹின் மரணம் பற்றிய வசனமாகும். அவர் மரணமடையவில்லை. மாறாக, உயிருடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளார் என்று அவர்கள் மொழியாக்கம் செய்கின்றனர். ஆனால் அவர் (மஸீஹ்) மரணமடைந்து விட்டார் என்று நாம் மொழியாக்கம் செய்கின்றோம். எனவே இந்த 2, 3 வசனங்களைத் தவிர்த்து மீதமுள்ள முழு திருக்குர்ஆனும், மொழியாக்கமும் ஒன்றுபோல் உள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முன்னர் தோன்றிய சான்றோர்களும் இந்த வசனங்களுக்கு நாம் செய்த மொழியாக்கத்தையே செய்துள்ளனர். நமது புத்தகங்களில் அதற்கான ஆதாரங்களையும், குறிப்புகளையும் நாம் Quote செய்துள்ளோம்.

எந்த வசனங்களைக் குறித்து அதன் மொழியாக்கம் வேறுபட்டதாகும் என்று எதிரிகள் கூறுகின்றார்களோ அவற்றை குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ள விரிவுரைகளை பாருங்கள். அங்கு முந்தைய சான்றோர்களின் Quote இடம் பெற்றுள்ளன. அல்லது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தஃப்ஸீர்களை படியுங்கள். அங்கும் இந்த ஆதாரங்களும், குறிப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுமட்டுமின்றி ஒரு சிறிய புத்தகம் உள்ளது. அதில் மஸீஹின் மரணம், மஸீஹின் வாழ்க்கை, ஈஸா மீண்டும் இறங்கி வருதல் பற்றிய ஆதாரங்கள் தொடர்பான அனைத்து விஷயங்களும் எழுதப்பட்டுள்ளன. இதுமட்டுமின்றி இன்னும் பல சிறிய சிறிய புத்தகங்கள் உள்ளன. அதனை வக்ஃபே நவ் துறையின் செயலரும் அல்லது லஜ்னா துறையும் வாங்க வேண்டும். UK வில் அவர்கள் இந்தப் பணியை தொடங்கி விட்டனர். ஆங்கிலத்தில் அதனை மொழியாக்கம் செய்து அவர்கள் அச்சிட்டும் வருகின்றனர். எனவே உங்களிடம் ஆதாரம் தயாராக இருப்பதற்கு (வசதியாக) இங்குள்ளவர்களும் அதனை வாங்கி அச்சிட வேண்டும்.

☆ பிள்ளைகளின் தர்பிய்யத் தொடர்பாக என்ன விஷயம் மிகவும் அவசியமானதாக உள்ளது? என்று ஒரு சிறுமி கேள்வி கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: பிள்ளைகள் உங்களைப் பார்த்து அமல் செய்யும்படி நீங்கள் உங்களது முன்மாதிரியை ஆக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் உங்களை முன்மாதிரியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். தொழுகைகளை நீங்கள் பேணக்கூடியவர்களாக இருக்க வேண்டும். திருக்குர்ஆன் ஓதுவதில் நீங்கள் தொடர்ந்து பின்பற்றுபவராக இருக்க வேண்டும். தாயும், தந்தையும் இருவரும் திருக்குர்ஆன் ஓதுபவராக இருக்க வேண்டும். நன்மை செய்யும்படி வெறும் அறிவுரை மட்டுமே இருத்தல் கூடாது. மாறாக, நன்மைகள் செய்வதன் பக்கம் தாய், தந்தை இருவருக்கும் சுயம் கவனம் இருக்க வேண்டும். உண்மை பேசுவதன் பக்கம் தாய், தந்தை இருவருக்கும் கவனம் இருக்க வேண்டும். தவறான கூற்றை சகித்துக் கொள்ளக்கூடாது. எனது தாய், தந்தை சுயமே உண்மை பேசுகின்றனர்; உண்மையை விரும்புகின்றனர் என்று பிள்ளைகளும் தெரிந்திருக்க வேண்டும். உங்களது செயல் அப்படி இருக்குமென்றால் அது பிள்ளைகளை நல்லவர்களாக்கி விடும்.

☆ இஸ்லாம் என்பது ஒரு மார்க்க கொள்கை அல்ல. மாறாக, அதுவொரு கலாச்சார செயல்பாடாகும் என ஏராளமான முஸ்லிம் அல்லாத ஆஸ்திரேலியர்கள் எண்ணுகின்றனர் என்று ஒரு சிறுமி கேள்வி கேட்டார்.

இக்கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் அவர்களுக்கு திருக்குர்ஆனை திறந்து காட்டுங்கள். அதில் நூற்றுக்கணக்கான இடங்களில் கட்டளைகள் இடம் பெற்றுள்ளன. அவை மார்க்க கொள்கைகளுடன் தொடர்புடையதாக உள்ளன. இஸ்லாம் என்பது வாழ்க்கையின் எல்லா அம்சங்கள் தொடர்பாகவும் எடுத்துரைக்கும் ஒரு மார்க்கமாகும். ஒரு குடும்பத்தின் அடிப்படை விஷயத்திலிருந்து உலகளாவிய தொடர்புகள் வரை வழிகாட்டுகின்றது.

திருக்குர்ஆனில் தக்வா என்ற சொல் மீண்டும் மீண்டும் பல முறை சுமார் 100–ற்கும் மேற்பட்ட முறை வந்துள்ளது. அல்லது அதை விட அதிகமான முறை வந்துள்ளது. இஸ்லாம் கலாச்சார மார்க்கம் என்றால் அல்லாஹ் தக்வாவின் மீது ஏன் அழுத்தம் கொடுத்துள்ளான். தக்வா என்பது அல்லாஹ்விற்கு அஞ்சுவதன் பெயராகும். அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளின்படியும் அமல் செய்ய வேண்டும். உங்களது வாழ்க்கையின் நோக்கம் இதுவே ஆகும்.

இதுபற்றி திருக்குர்ஆனில் இவ்வாறு வந்துள்ளது.

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُوْنِ

உங்களது வாழ்க்கையின் நோக்கம் அல்லாஹ்வின் முன் குனிவது மட்டுமே ஆகும். எனவே நீங்கள் ஐவேளை தொழுகையை நிறைவேற்றுங்கள். இதுவே வாழ்க்கையின் நோக்கமாகும். எனவே

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

இறைவணக்கம் செய்வதையே வாழ்க்கையின் நோக்கமாக திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க இஸ்லாம் ஒரு கலாச்சார செயல் வடிவமாகும். அது மார்க்கமல்ல என்று நம்மால் எப்படி கூற முடியும்? மார்க்கத்தின் நோக்கம் என்ன? திருக்குர்ஆனின் அடிப்படையில் மார்க்கத்திற்கு இரண்டு நோக்கங்கள் உள்ளன. ஒன்று, மனிதனை அவனைப் படைத்தவனுக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டும். இரண்டாவது, ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதனின் மீது என்ன பொறுப்புகள் உள்ளன என்பதை எடுத்துரைப்பதாகும். அப்படியிருக்க இது கலாச்சாரமாகும். மார்க்கம் அல்ல என்று நாம் எப்படி கூற முடியும்?

இந்த தவறான புரிதலை நீங்கள் இவ்வாறு நீக்குங்கள். மனித வாழ்வின் நோக்கம் அல்லாஹ்வின் முன் குனிதலும், அவனுக்கு முன்னால் சஜ்தா செய்வதுமே ஆகும் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது என்று நீங்கள் அவர்களிடம் கூறுங்கள். உண்மையில் உங்களுக்கு அல்லாஹ்வின் அன்பின் அவசியம் இருக்கின்றது. கலாச்சாரம் நன்மைகளை பெறுவதற்கு அல்ல என்பதை உங்களது ஒவ்வொரு செயலும் ஐவேளை தொழுகையில் எடுத்துரைக்கின்றது.

☆ ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அஹ்மதி பிள்ளைகளுக்கு சிறிது Landmark இருக்க வேண்டும். அவர்கள் ஒரு நோபல் பரிசு பெற வேண்டும் என்று கூறியுள்ளார்களே? என்று ஒரு சிறுமி கேட்டார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அவ்வாறு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியிருந்தார்கள். அதன் பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தனத ஒரு சபையில் இவ்வாறு கூறினார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூற்றாண்டு விழா நடைபெற்று வருகின்றது. நூற்றாண்டு வரும்போது அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஒரு அப்துஸ் ஸலாம் அல்ல. டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களின் தகுதியைப் பெற்ற சுமார் 100 மக்கள் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்கள். இதனை வலுயுறுத்தியவாறு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் டாக்டர் அப்துஸ் ஸலாம் அவர்களின் தகுதியை அடைந்த மக்கள் இன்னும் வர வேண்டும் என்று கூறியிருந்தார்கள்.

அதற்குப் பிறகு நான் எனது நிகழ்ச்சிகளிலும், வகுப்புகளிலும் மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் ஆராய்ச்சியில் செல்லும்படியும், உங்களின் குறைந்தபட்ச இலக்காக நோபல் பரிசு இருக்க வேண்டும் என்றும் கவனமூட்டியுள்ளேன்.

ஹுஸூர் அவர்கள் ஒரு சிறுமியை நோக்கி, உனது விஷயத்தை நான் உண்மைப்படுத்தி விட்டேன். இப்போது கேள்வி என்ன? என்று கூறுங்கள் என்றார்கள். அதற்கு வாக்கிஃபாத்தே நவ் பிள்ளைகளும் ஆராய்ச்சித்துறைகளில் செல்லலாமா? என்று அந்த சிறுமி கேட்டார்.

அக்கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மருத்துவ ஆராய்ச்சித்துறையில் செல்லலாம். வரலாற்று ஆராய்ச்சித்துறையில் செல்லலாம். இதுபோன்று இன்னும் பல விஷயங்கள் உள்ளன. ஏனைய துறைகள் உள்ளன. எதில் உங்களுக்கு திறமை இருக்குமோ, எதில் உங்களுக்கு தகுதி இருக்குமோ அதில் நீங்கள் ஆராய்ச்சியில் ஈடுபடலாம். இந்த தரத்தை நீங்கள் அடையலாம். நீங்கள் அடையவும் வேண்டும்.

☆ எனது திருமணம் ஜமாஅத்தின் ஒரு முரப்பியோடு நடந்துள்ளது. வாக்கிஃபே நவ் மற்றும் ஒரு முரப்பியின் மனைவியின் என்ற அடிப்படையில் எனது பொறுப்புகள் என்ன? என்று ஒரு பெண் பிள்ளை கேள்வி கேட்டார்.

இந்த கேள்விக்கு ஹுஸூர் அவர்கள் பதிலளித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: உங்களின் பொறுப்பு இரட்டிப்பாகி விடுகின்றது. உங்களது குடும்பத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். உங்களை முன்னுதாரணமாக நீங்கள் ஆக்கிக் கொள்ள வேண்டும். முரப்பி எங்கு பணியமர்த்தப்படுகின்றாரோ அங்குள்ள மக்கள் உங்களை பார்ப்பார்கள். எல்லா ரீதியிலும் நீங்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். தொழுகையின் அடிப்படையிலும், தர்பிய்யத்தின் அடிப்படையிலும், உங்களின் பேச்சுக்களின் அடிப்படையிலும், உங்களின் செயல்களின் அடிப்படையிலும், உங்களின் பர்தாவின் அடிப்படையிலும் எல்லா வகையிலும் முரப்பியின் மனைவி முன்னுதாரணமாக இருக்க வேண்டும். பணிவு மற்றும் எளிமையின் அடிப்படையில் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். உங்களிடத்தில் பணிவும் அதிகமாக இருக்க வேண்டும்.

வாக்கிஃபாத்தே நவ் உடனான இந்த சந்திப்பு 12.40 மணிக்கு நிறைவு பெற்றது. இறுதியில் ஹுஸூர் அவர்கள் கனிவுடன் பிள்ளைகளுக்கு பேனாவை (எழுதுகோலை) அன்பளிப்பாக வழங்கினார்கள்.

**தனி நபர் மற்றும் குடும்பங்களுடனான சந்திப்பு**

இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் தனது அலுவலகத்திற்கு சென்று விட்டார்கள். நிகழ்ச்சி நிரலுக்கேற்ப குடும்பங்களுடனான சந்திப்பு ஆரம்பமானது. இன்று காலை நடைபெற்ற இந்த அமர்வில் 20 குடும்பங்களும் 66 தனி நபர்களும் தனது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்கும் நற்பேற்றை பெற்றார்கள். Black Town, Perth, Darwin, Tasmania ஆகிய ஆஸ்திரேலிய ஜமாஅத்துகளிலிருந்து வந்திருந்த குடும்பங்கள் சந்தித்தன. Perth மற்றும் Darwin போன்ற ஊர்களிலிருந்து வந்திருந்த குடும்பங்கள் 5 முதல் 6 மணி நேர விமானப் பயணம் செய்து ஹுஸூர் அவர்களை சந்ததிக்க வந்திருந்தார்கள். இதுமட்டுமின்றி South Pacific ன் தீவான Soloman Islands நாட்டின் முபல்லிக் இன்சார்ஜ் சாஹிபும் ஹுஸூர் அவர்களை சந்திக்கும் நற்பேறு பெற்றார்.

மதிப்பிற்குரிய ஹாபிஸ் அஹ்மது ஜிப்ராயீல் சாஹிப் (மர்ஹூம் ஜமாஅத் முபல்லிக்) மற்றும் நாயிப் அமீர் கானா ஆகியோர் மூலமாக ஜமாஅத்தின் ஜமாஅத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டு ஜமாஅத் நிறுவப்பட்ட நாடு தான் Soloman Islands ஆகும். தற்போது இங்கு அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் உறுதியாக நிலைபெற்றுள்ளது. ஜமாஅத்திற்கு சொந்தமான முறையான சென்டர் உள்ளது. அதன் ஒரு பகுதி பள்ளிவாசலாக பயன்படுத்தப்படுகிறது. கானாவிலிருந்து ஒரு முபல்லிக் அங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹுஸூர் அவர்களை சந்திக்கக்கூடிய இந்த அனைத்து சகோதரர்களும் தனது தன்பிற்குரிய எஜமானருடன் நிழற்படம் எடுத்துக் கொள்ளும் நற்பேறு பெற்றார்கள். ஹுஸூர் அவர்கள் கல்வியில் சிறப்பான பட்டம் பெற்ற மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் கனிவுடன் பேனா வழங்கினார்கள். சிறிய வயதுடைய பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் சாக்லேட் வழங்கினார்கள். சந்திப்பின் இந்த நிகழ்ச்சி 1.45 மணிநேரம் வரை நடைபெற்றது. அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் மஸ்ஜிது பைத்துல் ஹுதாவிற்கு சென்று லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள்.

**நிக்காஹ் அறிவிப்பு**

தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் ஒரு நிக்காஹ்விற்கான அறிவிப்பையும் செய்தார்கள். நிக்காஹ்விற்குரிய வழக்கமான வசனங்களை ஓதிய பிறகு நிக்காஹ் குத்பாவில்

ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

தற்போது நான் ஒரு நிக்காஹ்விற்கான அறிவிப்பை செய்வேன். அது ஜமாஅத்தின் முரப்பியான மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் மஜீத் பாஜ்வா சாஹிப் அவர்களின் மகளாகிய அன்பிற்குரிய லுப்னா ஸோஸன் பாஜ்வா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னாரின் நிக்காஹ் மதிப்பிற்குரிய முபாரக் மஜீத் பாஜ்வா சாஹிப் அவர்களின் மகனாகிய அன்பிற்குரிய முஹம்மத் ஃபாதிஹ் பாஜ்வா சாஹிப் அவர்களுடன் இந்த நிக்காஸ் ஒரு லட்சம் பாகிஸ்தானிய ரூபாய் மதிப்பிலான ஹக் மஹரில் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

நிக்காஹ் மற்றும் திருமணத்தின் அடிப்படை தக்வாவின்படி இருக்கும்போதுதான் வெற்றி கிடைக்கும். எனவே தான் தக்வாவில் நிலைத்திருங்கள் என்று அல்லாஹ் மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளான். தக்வாவில் நிலைத்திருங்கள் என்று அல்லாஹ் கூறியிருக்கின்றான். தக்வாவின் வழி நடந்து ஒருவர் மற்றவரின் உறவுகளை பேண வேண்டும். இது பெண் குடும்பத்தினரின் கடமையும் ஆகும். ஆணின் கடமையும் ஆகும். பெண்ணிற்கும் கடமை உள்ளது. ஆணிற்கும் கடமை உள்ளது. தமது உறவுகளை மட்டும் நிலைநாட்டாமல் ஒருவர் மற்றவர்களுடனான இரத்த உறவுகளை பேணி நடக்க வேண்டும். அவர்களை மதித்து நடக்க வேண்டும்.

பின்னர் அல்லாஹ் கூறுகின்றான்: உறவுகளை பேணுவதில் வாய்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எனவே நினைவிற் கொள்ளுங்கள். வரன் நிர்ணயிக்கப்பட்டு திருமணம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் இதனை கவனத்திற் கொள்ள வேண்டும். சில குடும்பங்கள் ஒருவர் மற்றவரை அறிந்திருக்கின்றனர். சிலர் அறிவதில்லை. எனவே உண்மையுடன் தனது நிலையையும் இதர விவரங்களையும் கூறி விட வேண்டும். ஏனென்றால் அப்போது தான் பின் நாட்களில் பெண்ணிற்கும் புகாருக்கான சந்தர்ப்பம் அமையாது. அதேபோன்று பையனுக்கும் புகாருக்கான சந்தர்ப்பம் தோன்றாது.

இதேபோன்று அந்நிலையில் இரு வீட்டாருக்கும் எந்தப் புகாரும் இருக்க முடியாது. ஏனென்றால் சில முறை இவ்வாறு நடந்து விடுகின்றது. அதாவது வரனிற்காக தவறான தகவல்கள் கொடுக்கப்படுகின்றன. பிறகு ஏதாவதொரு வகையில் பகைமை உருவாகும்போது அந்நிலையில் ஒருவர் மற்றவர் மீது குற்றச்சாட்டுகளை சுமத்த தொடங்கி விடுகின்றனர். அவர் இன்ன இடத்தில் பொய் பேசினார். இவர் இந்த இடத்தில் பொய் பேசினார். அல்லது தவறான கூற்றை பயன்படுத்தினார் என்று குற்றம் சுமத்துகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் நல்ல முறையில் உறவை பேணினால், உறவுகளை நிலைநாட்ட விரும்பினால் பின்னர் உலகத்தை பார்க்கக்கூடாது. மாறாக, அல்லாஹ்விற்கு விருப்பமான விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். வாய்மைதான் அல்லாஹ்விற்கு மிகவும் பிடித்த விஷயமாகும். பொய் பேசுவதை அல்லாஹ் ஷிர்க்கிற்கு இணையான காரியமாக கூறியிருக்கின்றான்.

அதேபோன்று ஹுகூகுல் இபாத் – இறை அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குதல் போன்ற விஷயங்கள் இருக்கின்றன. எனவே அல்லாஹ் கூறினான்: இறை அடியார்களுக்குரிய உரிமைகளின் அடித்தளம் உங்களது இரத்த உறவுகளிலிருந்து அமைகின்றது. இரத்த உறவுகள் அதன் அடிப்படையாக அமைகின்றன. நீங்கள் உங்களது இரத்த உறவுகளை மட்டும் கருத்தில் கொண்டால் போதாது. மாறாக, உங்களது மாமியார் குடும்பத்தின் இரத்த உறவுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். இவ்வாறு கருத்தில் கொள்ளும்போது பின்னர் அன்பு மற்றும் நேசத்தின் அடிப்படையாகக் கொண்ட சமூகம் நிலைநாட்டப்படும். அது சகோதரத்துவத்தின் சூழலாக அமையும்.

எனவே உறவுகள் இந்த அடிப்படைகளை கொண்டு அமைகின்றன. தக்வாவின் வழி நடந்து நிலை பெறுகின்றன. அதுபோன்ற உறவுகளே நிலைபெறக்கூடியதாக இருக்கும். பின்னர் அது அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசாக அமையும்.

இன்று ஏற்பட்டுள்ள இந்த உறவு இந்த விஷயங்களை கருத்தில் கொள்ளக்கூடியதாகவும், எப்போதும் நிலைபெறக்கூடியதாகவும் அல்லாஹ் ஆக்குவானாக. மேலும் அல்லாஹ் இதன் மூலம் நல்ல சந்ததிகளை உருவாக்குவானாக. இந்த சில சொற்களுக்குப் பிறகு நான் தற்போது நிக்காஹ்விற்கான அறிவிப்பைச் செய்கின்றேன்.

பின்னர் ஹுஸூர் அவர்கள் இரு தரப்பிலிருந்தும் சம்மதத்தை பெற்றுக் கொண்டார்கள். இந்த உறவு அருளுக்குரியதாக அமைய தற்போது துஆ செய்து கொள்ளுங்கள் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

### ஆமீன் நிகழ்ச்சி

துஆவிற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பினார்கள். ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு செல்லும்போது வழியில் ஒரு பிள்ளையின் தந்தை ஹுஸூர் அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, இன்று மாலை ஆமீன் நிகழ்ச்சி உள்ளது. ஆனால் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு எங்கள் குடும்பத்திற்கான விமானம் புறப்பட்டுவிடும். எனவே எனது பிள்ளை அதில் பங்கு பெற முடியாது என்று கூறினார்.

அப்போது ஹுஸூர் அவர்கள், உங்களது குழந்தையை உடனே அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் தனது இருப்பிடத்திற்கு சென்றார்கள். மேலும் காத்திருந்தார்கள். குழந்தை வந்து விட்டது என்று ஹுஸூர் அவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டதும் ஹுஸூர் அவர்கள் வெளியே வருகை தந்தார்கள். வீட்டின் கதவருகிலேயே திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை குழந்தையிடமிருந்து கேட்டார்கள். பின்னர் துஆ செய்து வைத்தார்கள்.

அந்த குழந்தை எவ்வளவு நற்பேறு பெற்ற குழந்தையாக இருந்தது. இந்த நற்பேறு தனது அன்பிற்குரிய எஜமானரின் நேசத்தால், பரிவால் நிறைந்திருந்தது.

### கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஹுஸூர் அவர்களின் சந்திப்பு

நிகழ்ச்சிநிரலுக்கேற்ப 6 மணிக்கு ஹுஸூர் (அய்ய) அவர்கள் மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்திருந்தார்கள். மேலும் கல்லூரி மற்றும் பல்கலைகழத்தில் கல்வி பயிலும் மாணவர்களுடனான ஹுஸூர் அவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி ஆரம்பமானது. திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது.

அன்பிற்குரிய முபாரக் அஹ்மத் பின் அப்தில்லாஹ் திருக்குர்ஆன் ஓதினார். ஃபாயிக் ஜான் கான் சாஹிப் அதன் ஆங்கில மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார். அதன் பிறகு சர்ஃபராஸ் ரஹீம் சாஹிப் (தேசிய கல்விச் செயலர்) அவர்கள் ஓர் அறிமுக அறிக்கையை சமர்ப்பித்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: தொடக்கப் பள்ளியில் நமது மாணவர்களின் எண்ணிக்கை 404 என்றும், அதில் 203 திஃபில்கள் ஆவர் என்றும், 201 நாஸிராத் சிறுமிகள் என்றும் கூறினார்கள். உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயில்கின்ற மாணவர்களின்

எண்ணிக்கை 332 என்றும், அதில் 58 திஃபில்கள் இருப்பதாகவும், 99 காதிம்கள் இருப்பதாகவும், 62 நாஸிராத் சிறுமிகள் இருப்பதாகவும், 23 அன்ஸார்கள் இருப்பதாகவும், 90 லஜ்னாக்கள் இருப்பதாகவும் கூறினார்கள். (இதில் அன்ஸார் மற்றும் லஜ்னாக்கள் மொழிகளை கற்கக்கூடியவர்கள் அல்லது ஏதோவொரு Diplomo கல்வியை பயிலக்கூடியவர்கள் ஆவர்)

Tafe மாணவர்களின் விவரங்கள் இவ்வாறாகும். இதில் 96 மாணவர்கள் உள்ளனர். 66 மாணவிகள் உள்ளனர். மொத்த எண்ணிக்கை 162 ஆகும்.

Bachelor/Honours மாணவர்களின் விவரங்கள் இவ்வாறாகும். மாணவர்களின் எண்ணிக்கை 106 ஆகும். மாணவிகளின் எண்ணிக்கை 113 ஆகும். தற்போது மாஸ்டர்ஸ் பயின்று கொண்டிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 51 ஆகும். மாணவிகளின் எண்ணிக்கை 26 ஆகும். மாஸ்டர்ஸ் பயின்று வரும் மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 77 ஆகும்.

தற்போது 6 மாணவர்களும் 9 மாணவிகளும் பல்வேறு கட்டுரைகளில் Phd செய்து வருகின்றனர். இவ்வாறு ஆஸ்திரேலியாவின் பல்வேறு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைகழகங்களிலும் கல்வி பயின்று வரும் மாணவ மற்றும் மாணவிகளின் மொத்த எண்ணிக்கை 1209 ஆகும்.

ஹுஸூர் அவர்கள், உங்களின் 4000 தஜ்னீதில் 32 சதவிகிதம் மாணவர்கள் ஆவர் என்று கூறினார்கள்.

தேசிய கல்விச் செயலர் கூறினார்: தற்போது இங்கு 55 மாணவர்கள் அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் 39 மாணவர்கள் Bachelor Course பயின்று வருகின்றனர். 14 மாணவர்கள் மாஸ்டர்ஸ் பயின்று வருகின்றனர். 2 மாணவர்கள் Phd செய்து வருகின்றனர். இறைவன் அனைவரையும் வெற்றி பெறச் செய்வானாக என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

அதன் பிறகு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தாரிக் சூஹான் சாஹிப் என்பவர் Schizophrenia என்ற சுற்றுச்சூழலுக்கான காரணம் என்ற தலைப்பில் தனது ஆய்வை எடுத்துரைத்தார்கள்.

அன்னார் இவ்வாறு கூறினார்கள்: Schizophrenia உலகின் 1 சதவிகித மக்களில் காணப்படும் நோயாகும். இந்த நோயின் நிலையில் மனிதனின் செவிக்கு பலதரப்பட்ட கேட்காத பொருட்கள் கேட்கின்றன. சில சமயம் இல்லாத பொருட்களும் தென்படும். அத்துடன் இந்த நோய் நினைவாற்றல் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பொதுவாக இந்த நோய் இளைஞர்களிடமே ஏற்படுகின்றது. இதற்கான காரணம் தெரியவில்லை. இதனை குணமாக்கும் மருந்தும் கிடைக்கவில்லை.

தற்போது நடைபெற்று வருகின்ற ஆய்விலிருந்து தெரிய வருவது என்னவென்றால், சுற்றுச்சூழல் காரணங்களால் உதாரணமாக சிறு வயதில் தலையில் ஏற்பட்ட காயம், மன அழுத்தம் மற்றும் தவறான மருந்துகளை அதிகமாக உட்கொள்ளுதல் மட்டுமின்றி Neuregulin (NRG1) கூட அதற்கான காரணமாக அமையக்கூடியம். இன்னும் ஆராய்ச்சிகள் செய்வதன் மூலம் இந்த Gene ஐ அழுத்தி இந்த நோயை தடுக்கக்கூடிய மருந்துகளை கண்டு பிடிப்பதில் உதவி கிடைக்க முடியும்.

ஹுஸூர் அவர்கள் இந்த ஆராய்ச்சி தொடர்பாக பல்வேறு விஷயங்களில் விவரங்கள் கேட்டார்கள்.

இதன் பிறகு டாக்டர் அப்ரார் அஹ்மத் சாஹிப் Prevention on Respiratory infections and infections and role facemasks என்ற தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையை எடுத்து வைத்தார்கள். சுவாசம் தொடர்பான நோய்களிலிருந்து நல்ல முறையில் நம்மை நாம் எவ்வாறு பாதுகாத்துக் கொள்ள முடியும்? என்பதை கூறினார்கள். நுரையீரலில் ஏற்படும் தொற்று உலகில் மரணத்திற்கான 3வது காரணமாக உள்ளது. இது ஏழை நாடுகளில் மரணத்திற்கான பெரிய காரணமாக உள்ளது. இந்த நோய்களில் பொதுவாக ஜலதோஷம் போன்ற நோயும் உள்ளது. உலகின் பெரும் எண்ணிக்கையை தாக்கத்திற்கு உள்ளாக்கக்கூடிய ஜலதோஷம் உதாரணமாக Spanich flu மற்றும் TB போன்ற நோய்கள் உள்ளன. ஏராளமான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளின் மூலம் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்றாலும் மேலும் சில விஷயங்கள் உதாரணமாக, கைகளை கழுவுதல், முகக் கவசம் அணிதல், கையுறை, சிறப்பான கண்ணாடி, நோயாளிகளை மற்றவர்களிடமிருந்து பிரித்து வைப்பது போன்ற விஷயங்கள் இந்த நோயிலிருந்து தப்பிப்பதற்கு நல்ல வழிமுறையாக அமைகின்றது.

தற்போதைய ஆராய்ச்சியிலிருந்து இந்த விஷயத்திற்கான தெளிவான சான்றுகளும் கிடைத்துள்ளன. ஏழை நாடுகளில் பல்வேறு வகையான முகக்கவசங்கள் இந்த நோயிலிருந்து தப்பிப்பதற்கு நல்ல திட்டமாகும்.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஜலதோஷத்தின் ஆரம்ப நிலையில் Aconite என்ற ஹோமியோ மருந்தினை 1000 பொட்டன்சிஸியில் ஒரு டோஸ் கொடுக்க வேண்டும். 50 சதவிகிதம் குணம் கிடைத்து விடுகின்றது. பெரிய கூட்டங்களும் ஜலதோஷத்திற்கான காரணமாக அமைகின்றது. உங்களது ஆய்விலிருந்து இறுதியில் நமக்கு இந்த முடிவு தான் கிடைக்கின்றது. அதாவது எந்தெந்த முகக்கவசம் மிகவும் பயனுள்ளதாகும்? மேலும் முகக்கவசம் தயாரிப்பவர்கள் அதிகம் அதிகமாக எவ்வாறு சம்பாதிக்க முடியும் என்பதும் தெரிய வருகிறது.

மற்ற பல்வேறு இடங்களிலிருந்து நீங்கள் எவ்வாறு Data களை ஒன்று சேர்த்துள்ளீர்களோ அதேபோன்று ரப்வாவிலுள்ள ஃபஸ்லே உமர் மருத்துவமனையிலிருந்தும் புள்ளி விவரங்களை பெற்றுக் கொள்ளுங்கள். ரப்வாவிலுள்ள ஃபஸ்லே உமர் மருத்துவமனையும் இப்போது Student Training Hospital உடன் இணைந்து விட்டது.

நான் கானாவில் வசித்துள்ளேன். முதல் ஆண்டில் ஒருபோதும் நான் கோனீன் சாப்பிட்டது இல்லை. எனக்கு மலேரியா போன்ற நோய்கள் ஏற்பட்டதில்லை. மனைவி வந்த உடன் அன்னார் மருந்தை எடுத்தார்கள். நானும் மருந்து எடுத்துக் கொண்டேன். அப்போது மலேரியா அல்லது காய்ச்சல் ஏற்பட்டு விட்டது. மருந்து எடுக்காதபோது நோய் ஏற்படவில்லை.

முகக்கவசம் பல்வேறு வடிவங்களில் தயார் செய்யப்படுகின்றன. இவை மருத்துவர்களுக்கும், para medical ஊழியர்களுக்கும் தயாரிக்கப்படுகின்றது. நோயாளிகள் மற்றும் ஏனைய மக்களுக்கும் இவை தயாரிக்கப்படுகின்றன.

மாணவர்களுடனான ஹுஸூர் அவர்களின் இந்த சந்திப்பு நிகழ்ச்சி 7 மணி வரை நடைபெற்றது. அதன் பிறகு கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவிகளுடனான ஹுஸூர் அவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி ஆரம்பமானது.

திருக்குர்ஆன் திலாவத்துடன் இந்த நிகழ்ச்சி ஆரம்பமானது. அன்பிற்குரிய ஃபரஹ் கான் சாஹிபா திலாவத் செய்து அதன் உருது மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு ஆஸ்திரேலியாவின் தேசிய கல்விச் செயலரான மதிப்பிற்குரிய தாஹிரா யாஸ்மீன் சாஹிபா ஓர் அறிமுக அறிக்கையை வாசித்துக் காட்டினார்கள். அதன் பிறகு Phd செய்யக்கூடிய இரண்டு மாணவிகள் தத்தமது Presentation ஐ வழங்கினார்கள்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 17 June 2021 Issue No. 24

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அன்பிற்குரிய அப்துல் மஜீத் சாஹிபா Factors affection mathematics achievement of middle school Students in south Australia என்ற தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையை எடுத்துரைத்தார்கள். மேலும் சவுத் ஆஸ்திரேலியா அரசாங்கம் சவுத் ஆஸ்திரேலிய மாணவர்களுடைய National Assessment என்ற நிகழ்ச்சியின்கீழ் ஒரு சர்வே செய்தார்கள். அதன் அடிப்படையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மத்தியில் சிறந்த தொடர்பு மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி ஒப்பீடு செய்தார்கள். இதன் விளைவில் பள்ளிகள் மூன்று பகுதிகளாக பங்கிடப்பட்டது.

1. Catholic School
2. Government School
3. Private School

இந்த சர்வேயின் அடிப்படையில் Catholic பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் மற்றும் ஆசியர்களுக்கிடையில் இருந்த சிறந்த தொடர்பின் காரணமாக நல்ல முடிவுகள் காணக் கிடைத்தன. ஆசியர்கள் மற்றும் மாணவர்ளுக்கிடையில் மட்டும் சிறந்த தொடர்பு இருக்கவில்லை. மாறாக, பெற்றோர்களுக்கு மத்தியிலும் சிறந்த தொடர்பு இருந்தது. Mathematics-ல் உழைப்பும், மாணவர்களுக்கு மத்தியில் போட்டி போடும் மனப்பான்மையும் இருந்தது தெரிய வந்தது. Profesinal ஆசியர்களும் இந்த சிறந்த முடிவு வருவதில் முக்கிய பங்கு ஆற்றியிருப்பது தெரிய வந்துள்ளது என்று அவர் கூறினார்.

இதன் பிறகு அன்பிற்குரிய புஷ்ரா நஸீம் சாஹிபா Eco-Hydrological Model Development என்ற தலைப்பில் தனது Presentation வழங்கினார்கள். Eco-Hydrology அறிவியலின் ஒரு புதிய கிளையாகும். அன்னார் தனது ஆய்வை முன் வைத்தவாறு கூறினார்கள்: அதிகரித்து வரும் மக்கள் தொகையின் காரணமாக இந்த வளங்களை பயன்படுத்துவது இக்காலத்தின் அவசியத் தேவையாகும்.

Eco-Hydrology அறிவியலின் எப்படிப்பட்ட ஒரு புதிய கிளை என்றால் அதில் சுற்றுப் புறத்தை கருத்தில் கொண்டவாறு இயற்கை வளங்களை பாதுகாக்க முடியும். ஏனென்றால் சுற்றுச்சூழல் அமைப்பில் தாவரங்களுக்கு நீர் வளத்துடன் ஆளமான தொடர்பு உள்ளது. எந்தவொரு பகுதியிலும் தாவரங்கள் இருப்பதும், இல்லாமல் இருப்பதும் சுற்றுச்சூழலின் மாறுபாடுகளின் காரணியாக அமைகின்றன. எனவே கணக்கெடுப்பு அமைப்பின் அடிப்படையில் தற்காப்பு தொடர்பான நடவடிக்கைகளின் ஆராய்ச்சி மிகவும் அவசியமானதாக உள்ளது. அப்போதுதான் சுற்றுப்புற வளங்களை சிறந்த அமைப்பாக நாம் மாற்ற முடியும். மேலும் நம்பத்தகுந்த முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செய்து கொள்ள முடியும். ஆஸ்திரேலியா மிக முக்கியவத்துவம் வாய்ந்த நாடாகும். எனவே இந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவம் இந்த நாட்டிற்கு மிகவும் அவசியமாகும்.

மாணவிகளுடனான ஹுஸூர் அவர்களின் இந்த சந்திப்பு நிகழ்ச்சி 8 மணிக்கு முடிவுற்றது.

**ஆமீன் நிகழ்ச்சி**

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் பள்ளிவாசலின் கீழ்பகுதிக்கு வருகை தந்தார்கள். அங்கு நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஆமீன் நிகழ்ச்சி ஆரம்பமானது. ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் கீழ்கண்ட 28 ஆண் மற்றும் பெண் குழந்தைகளிடமிருந்தும் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதும்படி கூறினார்கள். ஓதக் கேட்டார்கள். இறுதியில் துஆவும் செய்தார்கள்.

(1) அன்பிற்குரிய ஃபுர்கான் அஹ்மத் ரானா, (2) ஹன்னான் அஹ்மத் ரானா, (3) கின்வான் மஹ்மூத், (4) யாஸர் மஹ்மூத், (5)ஹாகான் அஹ்மத், (6) ஹம்ஸா வஸீம், (7) இஜாஸ் அஹ்மத் கோந்தல், (8) காம்ரான் அஹ்தர், (9) மன்ஸூர் அஹ்மத், (10) முப்ராஸ் அஹ்மத், (11) தல்ஹா நோமான் கோந்தல், (12) உமைர் நவீத் அஹ்மத், (13) ஜீஷான் பாபர், (14) சர்ஃபராஸ் அஹ்மத், (15) அய்மான் நூர், (16) அன்பிற்குரிய யுஸ்ரா முஹ்மூத், (17) முஷ்அல் அஹ்மத், (18)அஸ்கா ராகா நிஸாம், (19) அருஷா கோந்தல், (20) அஸீஸா ஜாஸிபா ஹபீஸ் ஷேக், (21) மாரேஸே சவுத்ரி, (22) மஸ்கான் அஹ்மத், (23) நவ்ஹா ஹஸன், (24) ஒஷ்னா மிர்ஸா, (25) குர்ரத்துல் அய்ன், (26) ராஹிலா அஹ்மத் கமர், (27) சவ்ஃபியா கோந்தல், (28) ஆலியா தன்வீர்.

ஆமீன் நிகழ்ச்சிக்குப் பிறகு 8.20 மணிக்கு ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் தமது இருப்பிடத்திற்கு சென்று விட்டார்கள்.

**8 அக்டோபர் 2013 (செவ்வாய்கிழமை)**

ஹுஸூர் (அய்ய) அவர்கள் காலை 5:20 மணிக்கு பைத்துல் ஹுதா பள்ளிவாசலுக்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள். லண்டன் தலைமையகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தபால்கள், Fax-கள் மற்றும் கடிதங்களையும், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து கிடைத்த Fax-களையும் படித்தார்கள். மேலும் வழிகாட்டல்கள் வழங்கினார்கள். நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 11 மணியளவில் ஹுஸூர் அவர்கள் தமது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள். அடிஷ்னல் வகீலுத் தப்ஸீர் சாஹிப் மற்றும் அடிஷ்னல் வகீலுல் மால் சாஹிப் ஆகியோர் தனித்தனியாக ஹுஸூர் அவர்களை அலுவலகத்தில் சந்தித்து தமது தபால்களை முன் வைத்து வழிகாட்டுதல்களை பெற்றுக் கொண்டார்கள்.

இதன் பிறகு குடும்பங்களுடனான சந்திப்பு ஆரம்பமானது. காலை நேர இன்றைய அமர்வில் மொத்தம் 49 குடும்பங்களைச் சார்ந்த 210 நபர்கள் தனது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள். Marshen park ஜமாஅத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் மட்டுமின்றி ஃபிஜி நாட்டிலிருந்து வருகை தந்திருந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 36 நபர்கள் தனது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள்.

(பத்ர் வாரப் பத்திரிகை உருது, 10 ஜுன் 2021 தொகுதி 6 இதழ் 23 – தொடரும்......)

......☆......☆......☆......

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad